## இதயம் கனிந்த நன்றிகள்

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் ஆடற்கலையானது கண்களினால் பார்த்து, உள்ளத்தால் லயித்து பார்ப்போர் மனதைப் பரவசமடையச் செய்யும் தன்மை கொண்டது. இசையும், நடனமும் இறைவனின் அருட்கொடைகள். இசையை இராகமாகவும், நடனத்தை பரதமாகவும், மனித உணர்வுகளை பாவமாகவும் வெளிக்கொண்டு வருகின்ற இவ்வரிய கலையாம் பரதக்கலையை எமது அன்புச் செல்வி மேகவிக்கு அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நித்திய பரதஜோதி பரதக்கலைமணி ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் M.A., அவர்களுக்கு எமது சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய அரங்கேற்ற நிகழ்விற்கு வருகைதந்து சிறப்பித்த அவையோர்கள் அனைவருக்கும், பிரதம சிறப்பு விருந்தினர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் இன்றைய நிகழ்வில் நடனங்களுக்கு உயிரூட்டும் வண்ணம் பாடல்களைப் பாடிய கலைமாமணி திருமதி. குமுதினி பிருத்விராஜ் அவர்களுக்கும், மற்றைய பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும், நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், ஒப்பனையாளர்களுக்கும், இந்த நிகழ்ச்சி ஒழுங்கில் எமக்கு எல்லா வகையிலும் உதவியாக இருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்...

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது"

அன்புடன்

திரு. திருமதி பத்மசேகரன் குடும்பத்தினர்





# Baratha Niruthiya Arangetram



## Mehavi Pathmasekaran

(Disciple of "Bharatha Kalaimani"
**Smt. YALINI P. BALENDREN,** B.A., M.A. in Bharathanatyam)
31st March 2012



File name : Yalini - Multicolor



## குருவிற்குச் சமர்ப்பணம்

குருப்ரம்மா குருவிஷ்ணு குருதேவா மஹேச வரஹ
குருஸாஷாத் பரப் பிரம்மா தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ

பழந்தமிழ்க் கலைகளுள் ஆடற்கலையும் ஒன்றாகும். பாவ, ராக, தாளம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய இப்பரதக்கலை இன்றும் மக்களிடையே ஒரு நிலையான இடத்தில் நிற்கும் ஒரு தெய்வீகக் கலையாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கிணையாக எனது பெற்றோரின் வழிகாட்டலிலே எனது சித்தியைக் குருவாகக் கொண்டதே நான் செய்த பாக்கியம். இவர் இன்று டென்மார்க்கில் ஒரு சிறந்த திறமைமிக்க நடன ஆசிரியராகவும் விளங்குகின்றார். நான்கு வயதிலிருந்தே இவரிடம் நான் இக்கலையைப் பயின்று வருகிறேன். நடன வகுப்புகளில் எல்லா மாணவரிடமும் மிகவும் அன்பாகவும், நுணுக்கமான முறையிலும் நடனத்தை சொல்லித்தருவார். எனது சித்தியின் அயராத உழைப்பும், அவர் தந்த ஊக்கமும் தான்

இன்று நான் அரங்கேற்றங் காணும் வரை வந்துள்ளது. எனது நடனத்தில் மட்டுமல்ல மற்றும் எல்லா விடயத்திலும் ஒரு குருவாக, சித்தியாக, தாயாக உயர்ந்து உறுதுணையாய் நிற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவரை ஆனந்தக் கூத்தன் அருள்புரிய வேண்டி வணங்குகின்றேன்.









File name : Yalini - Multicolor

## குருவின் ஆசியுரை

ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதி நடராஜப் பெருமான் எம்மக்களுக்கு அளித்த இப்பரதக்கலையை, எனது பெறாமகளாகிய மேகவிக்குப் பயிற்றுவித்து இன்று அரங்கேற்றி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் என்னிடம் முழுமையாக குருபக்தியுடன் பரதம் பயின்று அரங்கேற்றங்கண்ட மாணவிகளில் ஐந்தாவது மாணவியாகத் திகழ்கின்றார். எட்டு வருடங்களாக இக்கலையைப் பயின்று வருகிள்றார். தனது நான்காவது வயதிலேயே தனி நடனமொன்றை ஆடிச் சிறப்பித்த பெருமைக்குரியவர். இவர் London Oriental Fine Arts Accademy பரீட்சை சபையினால் நடாத்தப்பட்டு வரும் பரீட்சையில் தரம் ஆறுவரை தோற்றியுள்ளார். அத்துடன் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவனம் (I.I.T.A) நடாத்தும் பரீட்சையில் தரம் நான்குவரை தோற்றியுள்ளார். இவ்விரு பரீட்சைகளிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளார் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவர் நடனத்தை மட்டுமல்ல கர்நாடக சங்கீதத்தையும், வயலின் இசையையும், டெனிஷ் வாய்ப்பாட்டும் (Solo Song) கற்று வருகின்றார். மேகவி குருபக்தியும், நல்லடக்கமும், விடாமுயற்சியும் உடைய ஒரு மாணவி. எதைக் கற்பித்தாலும் விரைவாக உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றலும் செய்திறனும் மிக்கவர். இவர் கலைத்துறையில் மட்டுமல்ல கல்வித்துறையிலும் சிறந்து விளங்க எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.







## அப்பம்மா வாழ்த்து

ஆடற்கலை பயின்று அரங்கப்பிரவேசம் காணும் அன்புப் பேத்தியே... மேகவியே... தாயின் கரம்பற்றி தளிராய் நீ நடந்த காலம்... உணர்வினிலே கலந்திருக்க ஈராறு வயதை நீ எட்டி இப்பொழுதில் நீ ஆடும் இசை மேவும் நடனக்கலை... உன் சிற்றன்னை தந்த கொடை... குருவின் வடிவில் தாய் அமைதல் குவலயத்தில் பெரும் பேறு... தாயுன் குருவிடத்தே தானும் கற்றல் தரணியிலே மகத்தான அரும்பேறு ... நீ உணர்ந்த கலையறிவை நில மாந்தர் மெச்சும் வண்ணம் நேர்த்தியுடன் நிகழ்த்திக் காட்டிட நேரம் நல்ல நேரமிது... ஆற்றலால் போற்றல் நீ பெற்றிடத்தான் அவனியிலே உகந்த தருணமிது உன் அரங்கப் பிரவேசம். உயர்வுடனே சிறப்புக்காண உள்ளம் நிறைந்து பொங்க உவகையுடன் வாழ்த்துகின்றேன்.

ஆசிகள் உந்தனுக்கு... என்றும் அன்புடன்

அப்பம்மா



## அம்மப்பா, அம்மம்மா வாழ்த்து

ஒரு மனிதன் கலையில் எவ்வளவு ஆர்வத்துடன் இருக்கின்றானோ, அவ்வளவிற்கு நீண்ட ஆயுளுடனும், நோயற்ற வாழ்வுடனும் இருப்பான் என்பது திண்ணம். ஆடற்கலையில் இன்று அரங்கேற்றம் காணவிருக்கும் எமது முதற்பேத்தி மேகவி பத்மசேகரன், எமது மகள் யாழினி பாலேந்திரனைக் குருவாகக் கொண்டதில் நாம் பெருமிதம் அடைகின்றோம். இவரது எதிர்காலம் சகல சிறப்புடன் அமைய வேண்டி தில்லை நடராஜன் அருள்புரிய வாழ்த்தி நிற்கின்றோம்.

அன்புடன்

அம்மப்பா, அம்மம்மா







File name : Yalini - Multicolor

## ஸ்ரீமதி யாழினி பா பாலேந்திரன் - நட்டுவாங்கம்

பரதநாட்டிய ஆரம்பக் கல்வியை யாழ் சதங்கை நர்த்தனாலய ஆசிரியை, நடனக் கலாஜோதி லீலா நாராயணன் அவர்களிடம் பயின்றார். பின்னர் திருமதி. மாலா சத்தியமூர்த்தி அவர்களிடத்தில் இக்கலையைக் கற்று டென்மார்க்கில் முதல் மாணவியாக அரங்கேற்றம் செய்து கொண்டவர் என்ற பெருமையும் பெற்றவர். அத்துடன் ஈழத்தமிழர் கலையரங்கத்தினர் 1996ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைஞர் விருதினை வழங்கிக் கௌரவித்தனர். 1998 ஆம் ஆண்டு இந்தியாவில் நட்டுவாங்கம் உட்பட பல உருப்படிகளையும் (குச்சுப்புடி, மோகினி ஆட்டம், பொம்மை நடனம்) பயின்று சென்னை நாரதகான சபாவில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தினார். இந்நிகழ்வில் “நித்திய பரதஜோதி” என்ற சிறப்பு பட்டத்தினை வீணை வித்துவான் பிச்சுமணி ஐயர் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். அத்துடன் “நிருத்திய சூடாமணி கலைமாமணி பத்மஸ்ரீ” சித்ரா விஸ்வேஸ்வரனிடம் பரதக்கலையைத் தொடர்ந்து கற்றுக் கொடுப்பதற்கான சான்றிதழையும் பெற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் வளாகம் கடந்த நுண்கலைக்கான இளமானி பட்டப்படிப்பை 2006 முதல் கற்றுக்கொண்டு சிறப்பாகத் தேர்ச்சி பெற்று 2009 முதல் முதுமானி பட்டப்படிப்பை அதே பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2011ல் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

### Accompanying Artists


Vocal :
Smt. Kumuthini Prithviraj


Kadam :
R.N Prakash


Flute :
Punitha Baskaran


Miruthangam :
R.R. Prathap


Violin :
Kalyani Shankar







### About MY Guru

Smt. Yalini P. Balendren (Specialist in Pediatric Nursing)

1996 : The first performer of Bharathanatya Arangetram in Denmark.

1999 : Yalini founded “Narthanalayaa” with the intention of committing herself to the propagation of the classical arts.

2001 : Under the guidance of the distinguished exponent of Bharathanatyam, PadmashriChitraVisweswaran, Yalini received bharathanatya teaching certificate. Awarded the title “Nithya BharathaJothi” by Pitchumani Iyar and NatyaVisaradha R. Padma (Naratha Ganasaba in India)

2006 : Enrolled as a student at Faculty of Arts, Bharathidasan University at Thiruchirappalli, India.

2009 : B.F.A., degree in Bharathanatyam.

2011 : M.F.A., degree in Bharathanatyam.

Awarded the title “Bharathakalaimani” by R. Uma Maheshwari (M.A. Yoga & Ph.d. Student in Bharathanatyam & School Headmaster) Kalai Kaviri College of Fine Arts



## REPETOIRE

| | | Ragam | Thalam |
|---|---|---|---|
| 1. | Pushpanjali | Amirthavarshini | Chathusra eakam |
| | Ganesha stuti | Naddai | Athi |
| | Alarippu | | Misrachappu |
| 2. | Jatheeswaram | Kanada | Rupakam |
| 3. | Andalkavuthuvam | Keeravani | Athi |
| 4. | Varnam | Valaji | Athi |
| | INTERMISSION | | |
| 5. | Keerthanam | Punnahavarali | Athi |
| 6. | Patham | Kaapi | Athi |
| 7. | Thandavan | Sinthu Pairavi | Athi |
| 8. | Thamizh Valthu | Desh | Athi |
| 9. | Thillana | Thilank | Athi |
| | MANGALAM | | |





கலாலயம் நடனப் பள்ளி
ஐக்கிய இராஜியம்

Kalaalayyam - School of Dance
Registered Charity - 1107575
624 Kenton Road
Middlesex HA3 9NR
Email: Kalaalayyam@live.com

அன்புடன் திருமதி யாழினிக்கு,

பன்னிரண்டு வயது நிரம்பிய பல நடனச் சோதனைகளில் சிறப்பு சித்தி பெற்ற மிகவும் ஆற்றல்மிகு மேகவி பத்மசேகரனின் நடன அரங்கேற்றம் இடம் பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேகவி கொடுத்து வைத்த பிள்ளை. தமிழ் மற்றும் கலை ஆர்வம்மிகு குடும்பத்தில் பிறந்து நடனத்தில் முதுகலைப் பட்டதாரியாகிய மிகவும் திறமையும் முயற்சியும்மிக்க உங்களை சிறிய தாயாகவும் குருவாகவும் கொண்டுள்ளார். மேகவியின் இன்றைய புனிதமான கலைப் பயணம் மிகவும் சிறப்புற அமைந்து பெற்ற தாயும் கற்பித்த குருவும், பிறந்த தாய்த்திரு நாடாம் தமிழீழமும் பெருமையுறும் வகையில் மென்மேலும் வளர ஆடல் வல்லானின் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன். இன்று சாதனை படைக்கவிருக்கும் மேகவிக்கும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் வாழ்த்துக்களும், பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

இங்கனம்
குமாரி அம்பிகை சீவரத்தினம்
இயக்குனர் - கலாலயம் நடனப் பள்ளி

### ஸ்கெயான் மாலதி தமிழ்க் கலைக்கூடம் வாழ்த்து

இன்று பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் செல்வி. மேகவி பத்மசேகரன் அவர்களை மனமார வாழ்த்துகிறோம். செல்வி மேகவி அவர்கள் சிறுவயதில் இருந்து மாலதி தமிழ்க் கலைக்கூடத்தில் தமிழ்மொழி, நடனம் கற்று வருகிறார். இதுதவிர பேச்சுப்போட்டி, பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி சிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலையை திறம்படப் பயிற்றுவித்த இவரின் குரு திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள். மேலும் செல்வி மேகவிக்கு ஊன்று கோலாக இருந்து ஊக்கமளித்த பெற்றோர், அம்மம்மா, அம்மப்பா அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி, இந்நிகழ்வு சிறப்பாக அமைய கலைக்கூட நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் வாழ்த்துக்கள்.

Skjern Malathy Tamilske Kulturcenter

### டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம் வாழ்த்து

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது பரதக் கலையாகும். இப்பரதக் கலையை முறைப்படி கற்று இன்று அரங்கேற்றம் காணும் செல்வப் புதல்வி மேகவியின் அரங்கேற்ற நிகழ்வு சிறப்பாக அமைய தில்லைக் கூத்தனை வணங்கி, வாழ்த்தி நிற்கின்றோம்.

டெனிஸ் தமிழ்
தோழமை ஒன்றியம்
SKJERN, TARM,
RINGKOBING



சாகித்ய சுருதிலயா இசைக்கல்லூரி
SAHITHYA SRUTHILAYA MUSIC COLLEGE
DIGEVEJ 22. 7400 HERNING. DENMARK.Tel: 004526662873. e.mail. sahithyan02@yahoo.com

## பாராட்டி வாழ்த்துகிறேன்

ஆதியும் அந்தமும் இல்லாத எம்பெருமான் முத்தமிழின் இலக்கணத்தோடு ஐம்புலன்களும் பரவசமடைய தோற்றுவித்த கலையே பரதக்கலையாகும். அதனால்தான் தில்லைக் கூத்தனான நடராஜப் பெருமானே நர்த்தனப் பிரியனாக நம்முன் காட்சியளிக்கின்றார்.பரதக் கலையானது அறிவியல், ஆத்மஞானம், மனஒருமைப்பாடு போன்ற மனித வாழ்வியலுக்கு இன்றியமையாத பல அம்சங்களை உள்ளடக்கியது. தமிழர்களின் வரலாற்றில் ஆரம்பகாலம் தொட்டு மன்னர்களின் படையெடுப்பாலும் சரி, அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பாலும் சரி தமிழினத்தின் கலையும், கலாச்சாரமும் அழிக்கப்பட்டாலும் தமிழர்களின் கலைகளிலுள்ள இலக்கண அமைதியும், நிலையான தரமும்தான் பரதக்கலையை இன்றும் பொலிவோடு மிளிர வைத்துள்ளது. பரதக்கலை முன்னிறுத்தப்படும்போது அதனை கற்பிக்கும் ஆசிரியர்கள் முன்னிலைப் படுத்தப்படுகிறார்கள்.

அந்தவகையில் ஸ்ரீமதி. யாழினி பாலலேந்திரன் அவர்கள் இக்கலையை அறிகை நிலையிலும், ஆற்றுகை நிலையிலும், உளவியல் நிலையிலும் ஆழ்ந்து பயின்று தரமான ஒரு நிலையை எய்தி முன்னிற்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய ஒரு விடயமாகும். தான் கற்ற கலையை மாணவர்களிற்கு கற்பித்து உயர்ந்த தரத்துடன் பரீட்சைகளிற்கு தோற்றுவிப்பதுடன் மாணவர்களை அரங்கேற்றம் வரை கொண்டு சென்று தனக்கென ஒரு தனியான முத்திரையை பதித்துக்கொண்டுள்ளார். இந்த வகையில் செல்வி. மேகவி பத்மசேகரன் அவர்களிற்கு ஆடற்கலையை அழகுற கற்பித்து அரங்கேற்றம் காண வழிவகுத்த ஆசிரியை ஸ்ரீமதி. யாழினி பாலேந்திரன் அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

செல்வி. மேகவி பத்மசேகரன் அவர்கள் பரதநாட்டியத்துடன் மட்டுமல்லாது வாய்ப்பாட்டு, வயலின் போன்ற கலைகளையும் மிகுந்த ஆர்வத்துடன் கற்றுவரும் ஒரு சிறந்த மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இன்று தனது கலைவாழ்வில் மற்றொரு காலடி பதிக்கிறார். மென்மேலும் இக்கலையிலே சிறந்து விளங்க வேண்டுமென மனதார வாழ்த்துவதுடன் இவரின் உயர்வுக்குக் காரணமான பெற்றோரையும், கலைக்குருவையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இங்கனம்

ஸ்ரீமதி. குமுதினி பிறித்விராஜ்
சாகித்ய சுருதிலயா இசைக்கல்லூரி,
டென்மார்க்



*"Arangetram" literally means asscending the stage. It represent the transition from a student for mature performer, yet, it is only the first step of an artists career.*

"இசைமாமணி" திருமதி. தர்மவதி இராமச்சந்திரமூர்த்தி
சங்கீத வீணை ஆசிரியை, நாதசொரூப இசைக்கல்லூரி,
மாலதி தமிழ்க் கலைக்கூடம்.

காலத்தால் அழியாத நுண்கலைகளில் ஒன்றுதான் பரதக்கலை. இப்புனிதமான கலையினை புலம்பெயர் நாடுகளில் விருப்பத்தோடு மாணவர்கள் கற்பது என்பது போற்றுதலுக்குரியது. அந்த வகையில் இக்கலையைக் கற்று அரங்கேற்றம் காணும் செல்வி மேகவி பத்மசேகரன் அவர்களை மனநிறைவுடன் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன். இவர்தம் சிறப்புக்கு உற்ற துணையாக நின்று ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்கின்ற அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, சித்தப்பா, சித்தி, மாமன், மாமி இவர்களுக்கும் எனது அன்பையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்தம் குருவும் சித்தியுமான நடன ஆசிரியை திருமதி. யாழினி பாலேந்திரன் அவர்கள் ஆடற்கலையின் அசலான அறிமுறை-செய்முறை அம்சங்களில் நிறைவான தன்னடக்கம் உள்ளவர். ஆற்றுகைப்படுத்தப்பட்டும் ஆடல் நுணுக்கங்களின் எண்ணக்கரு தவறாது பிசகாது பிள்ளைகளின் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் ஏற்ற தெளிந்த மனப்பதிவுடன் வழிப்படுத்துபவர். அவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். செல்வி மேகவி பத்மசேகரன் அவர்கள் கலைகள் மேல் மிகுந்த ஈடுபாடும் நன்மதிப்பும் கொண்டவர். குருபக்தியும், பெரியவர்களுடன் பணிவுடனும், மரியாதையுடனும் நடந்து கொள்கின்ற சீரிய பண்புள்ளவர். இப்பிள்ளை இன்னும் பல சிறப்புக்களைப் பெறவும், மொழிக்கும், கலைக்கும் அளப்பரிய சேவைகள் செய்ய வேண்டுமென ஆடிய பாதம் அவன் பாதம் பணிந்து வாழ்த்துகின்றேன். வாழியவே.

*Lis Theilgaard*
*Leder of Music School, Ringkøbing-Skjern*



*Mehavi was just 4 years old when she began playing the violin in Skjern Music School. The teaching took place after the Suzuki method also called native method. She continued long with violin lessons, and there was soon a burning desire to receive instruction in solo singing and singing in choris. Mehavi is still a solo student in the School of Music and performs happily at cafe concerts in the Music School Ringkøbing-Skjern. It is mostly the rhythmic singing and music that intrigues her, and there are several recordings on the CD with her. During a visit by the Indian violinist Kalyani Shankar, it was a big surprise for me to experience Mehavi play traditional Indian music on his violin - and even in my western ears at a high level. It proved that Mehavi possesses musical talent and great willpower while she acts very familiar scene and knows how to take an audience applause. It is pleasure for me to follow Mehavis musical commitment to both the local music scene as in the larger Tamil dance performances around the country and I wish her a bright future. Best wishes.*

*Lis Theilgaard*
*Leder of Music School, Ringkøbing-Skjern*